முருகப்பெருமான் துணை

**மகான் திருநாளைபோவார் (நந்தனார்) நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.03.2023, வெள்ளிக்கிழமை

1. ஞான வடிவே அரங்கராசா
ஞானிகள் வெளிப்பாடு குறித்து
ஞானம் அருளும் தேசிகனே
ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது சால் திங்கள்
குறைவிலா இருபானாற் திகதி புகர்வாரம்
(சுபகிருது வருடம் மாசி மாதம் 26 ம் நாள், 10.03.2023, வெள்ளிக்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசி
தேசிகனுக்கு திருநாளைபோவார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான ஞானவான்கள்தனை
ஞானப் படைகளாக அமைக்க இருக்க
ஞானிகள் பூசை செய்து கொண்டு
4. கொண்டுமே இயன்ற தருமம்
குவலயத்தில் செய்யும் மக்கள்
தொண்டர்களென சேர்க்கப்பட்டு
தொண்டுவழி அனைவரும் ஆசிபட
5. ஆசிபட அரங்கன் வழியில்
ஆற்றல் மிக்கவர்களாக மாற்றம்
வாசி யோகம் ஏதும் பயிலாமலே
வள்ளல்தன்மை நிலை கூடிட
6. கூடிட அவரவரும் தருமபலத்தால்
குலைநடுங்கும் மற்றவர் பசிபிணி
நாடியே விரட்டும் புண்ணியத்தால்
ஞானபண்டிதன் ஞானத்தலைவன்
7. தலைவன் இறங்கித் தானாகவே
தக்க ஞானிகள் ஆகும் மாந்தர்கள்
உலகில் இவர்களே என மெச்சி
உயர்வான வாசிதனை நடத்தித் தருவாரப்பா
8. அப்பனே தலைவன் நடத்தும் வாசியே
அளவிலா தடைபடா சக்தியாகி
மூப்பு நரை திரை வெல்லும்
முழுமையான ஆற்றலுமாகி
9. ஆகியே என்றும் தலைகணம்
ஆணவம் ஆபத்தான நிலைகள்
அகிலத்தில் சுயநல வழி செல்லா
அமைதி பொதுநலம் பேணும்

10. பேணும் தயவுமிக்கவர்களாக
பொருள் பற்றை வென்ற
ஞானவான்களாக ஞானிகளாக
ஞாலமதில் நிலைகள் உயர்வர்

11. உயர்வர் காலனை வென்றுமே
உலகையே மாற்றும் வண்ணம்
தயவே வடிவான தலைவன் முருகனை
தன்னுள் கண்டு மகிழ்வர்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–